JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.734/2025
PW.9

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆடிவேல் | தாலுகா | |
| தந்தை பெயர் | | தொழில் | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | | வயது | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 16.06.2026

(எதிரி நீதித்துறை காவலிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது ஆலங்குளம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2025ம் வருடம் கடையநல்லூர் காவல்நிலையத்தில் காவல்ஆய்வாளராகவும், சேர்ந்தமரம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக கூடுதல் பொறுப்பில் இருந்த போது 11.09.2025ம் தேதி சார்பு ஆய்வாளர் மாடசாமி என்பவர் நிலையக்குற்ற எண் 318/2025 பிஎன்எஸ் பிரிவுகள் 331(3),305(a) ன் படி பதிவு செய்யப்பட்ட வழக்கை மேல் விசாரணைக்காக வழக்கை நான் எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 2மணிக்கு சாட்சிகள் கருப்பையா, சங்கர குருவம்மாள் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். மேற்படி வரைபடம் அசாஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் கல்யாணசுந்தரம், வசந்தமல்லிகா, மாடசாமி, கருப்பையா, சங்கர குருவம்மாள், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் மாடசாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கின் எதிரியான சங்கர் என்பவரை தேடிச்சென்ற போது 13.09.2025ம் தேதி பாம்பு கோவில் சந்தை ரயில்வே ஸ்டேசன் அருகே மேற்படி எதிரி நிற்பதாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு போலிஸ் பார்ட்டியுடன் சென்று காவல்நிலையம் அருகே நின்று கொண்டிருந்த சங்கர் என்பவரை காலை 7 மணிக்கு எங்களுடன் அழைத்து சென்ற சாட்சிகள் அந்தோணி ராஜ் என்ற செல்லப்பா, அந்தோணி சாமி ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்து அவரை விசாரிக்க எதிரி எவ்வித அச்சுறுத்தலும் ஆசை வார்த்தைகளும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி வைத்திருந்த வழக்கு சம்பவத்தின் சொத்துக்களான கருப்பு நிற தோள்பையில் மறைத்து வைத்திருந்த சுமார் 50.60 மி.கி எடையுள்ள தங்க ஆரம் கவர்னர் மாலை–1, சுமார் 32.04 மி.கி எடையுள்ள நெக்லஸ்–1, சுமார் 42.56 மி.கி எடையுள்ள தங்க வளையல்கள்–4, சுமார் 6.22 மி.கி எடையுள்ள பச்சைக்கல் பதித்த தங்க கம்மல் – 1ஜோடி, சுமார் 8.05மி.கி எடையுள்ள பெரிய தொங்கு கம்மல் –1ஜோடி, சுமார் 3.94 மி.கி எடையுள்ள பூ படம் போட்ட தங்கமோதிரம்–1, சுமார் 2.94 மி.கி எடையுள்ள சிவப்புகல் பதித்த தங்க மோதிரம் –1, சுமார் 3.18மி.கி எடையுள்ள கைகள் இணைந்துள்ள மாடல் கொண்ட தங்க மோதிரம்–1 மற்றும் தான் வைத்திருந்த பனா சோனிக் ஏர்கண்டிஷ்னர்

சர்வீஸ்கிட் என எழுதப்பட்ட கருப்பு மற்றும் நீல நிறத்துடன் கூடிய தோள் பை ஒன்றையும் ஆஜர் செய்ததை சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். பின்னர் அன்றைய தினம் 9 மணிக்கு எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து மாண்புமிகு உச்சநீதிமன்ற கட்டளையை நிறைவேற்றி எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து பிஆர்எண் 474/2025 ஆக பெற்றேன். மேற்படி படிவம் 91 அசாஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் புகார்தாரரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். 12.09.2025ம் தேதி சாட்சி அண்ணாமலை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 14.09.2025ம் தேதி சம்பவத்தன்று சம்பவ இடத்தை பார்வையிட்டு விரல்ரேகை பதிவு செய்த காவல் ஆய்வாளர் சுரேஷ் என்பவரிடமிருந்து விரல் ரேகை பதிவு சான்று பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிஎன்எஸ் பிரிவுகள் 331(3),305(a) ன் கீழ் 17.09.2025ம் தேதி இந்நீதிமன்றத்தில் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விரல்ரேகை பதிவு எடுக்கும் போது அந்த இடத்தில் நான் இருந்தேனா என்றால் இருந்தேன். வீட்டிற்குள் செல்ல எத்தனை வாசலை கடந்து பீரோலைஅடைய வேண்டும் என்றால் 2 வாசல். தலவாசல் மற்றும் பெட்ரூம் வாசல் என்றால் சரிதான். தலவாசல், பெட்ரூம் வாசலில்கைரேகை பதிவு எடுத்தார்களா என்றால் பெட்ரூம் வாசலில் எடுத்ததை பார்த்தேன். அசாஆ.1 புகார் மனுவை எழுதியது யார் என்றால் யார் எழுதினார் என்று எதுவும் சொல்லவில்லை. வழக்கில் சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்திற்கும், காவல்நிலையத்தில் தகவல் சொல்லப்பட்ட நேரத்திற்குமான கால தாமதத்திற்கான காரணம் என்னுடைய விசாரணையில் துலங்கவில்லை என்றால் சரியல்ல. காலதாமதம் என்ன காரணம் என்று எங்கு சொல்லி உள்ளேன் என்றால் இவ்வழக்கின் எதிரி சங்கர் என்பவர் புகார்தாரருடைய உறவினர் என்பதால் அவரை தாமே கண்டுபிடித்து இழந்த சொத்துக்களை பெற்றுவிடலாம் என்று எதிரியை பல இடங்களில் தேடி கிடைக்காததால் அதன் பின்பு தாமதமாக கொடுக்கப்பட்ட புகார் மனு என்பது என்னுடைய விசாரணையில் தெரியவந்தது. இந்த வழக்கில் கருப்பு கலர் பேக் ஒன்று கைப்பற்றப்பட்டதாக என்னுடைய ஆவணங்களில் துலங்குகிறதா என்றால் கருப்பு கலர் மட்டும் உள்ள பேக் கைப்பற்றப்படவில்லை. நான் விசாரித்ததாக சொல்லப்படும் சாட்சி அந்தோணி சாமி என்ற செல்லப்பா கருப்பு பையிலிருந்து எடுத்து ஆஜர் செய்ததாக சொல்லி இருந்தால் அது பொய் என்றால் சரியல்ல.

அந்தோணி சாமி என்ற செல்லப்பா சேர்ந்தமரத்தில் பெரிய சமுதாயத்தை சார்ந்த நாட்டாமை என்றால் தெரியாது. அசா.3 மற்றும் அசா.4 என்னுடைய காவல்நிலையத்தில் அனுசரணையான சாட்சிகள் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும், சொன்ன நாள், சொன்ன நேரம், சொன்ன முறையில், சொன்ன இடத்தில் வைத்து எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும் வழக்கு ஆவணங்களும் குறிப்பிட்ட இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பின்யோசனை செய்து காவல்நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார் தாரர் நீதிமன்ற ஊழியர் என்பதாலும் அவரே அவரது நகைகளை மறைத்து வைத்துக்கொண்டு காவல்துறை உதவியுடன் எதுவும் அறியாத

எதிரியை இந்த வழக்கில் இணைத்து இந்த வழக்கு புணையப்பட்டு குற்ற இறுதிஅறிக்கை ஒரு தலைபட்சமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் ஒருதலைபட்சமாக விசாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த எதிரி இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட தக்கவர் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi